**ஐக்கிய அமெரிக்க தூதரகம்**
**கொழும்பு**

# ஊடக செய்தி

பொது விவகாரங்கள் பிரிவு
Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070
Email: shenjy@state.gov ● http://lk.usembassy.gov

செய்தி. 20170401

**யூஎஸ்எஸ் கொம்ஸ்டொக் இலங்கையில் மனிதாபிமான உதவிப் பயிற்சியில் பங்கேற்றது.**

கொழும்பு, **சித்திரை** 1: யூஎஸ்எஸ் கொம்ஸ்டொக் (LSD45) இலங்கை கடற்படை மற்றும் கடல் சம்பந்தமாக பயிற்றப்பட்ட குழுவினருடன் ஒருவாரகால பரிமாற்று செயற்பாடுகளின் பின் இன்று இலங்கையிலிருந்து திரும்பிச் செல்கின்றது. இப்பயிற்சிகள் மனிதாபிமான உதவிகள், அனர்த்த புனர்வாழ்வு முயற்சிகள் மற்றும் ஒருங்கிணைப்பு என்பனவற்றை அபிவிருத்திசெய்வதை மையப்படுத்தி ஐக்கிய அமெரிக்க மாலுமிகள் மற்றும் கடற்படை சம்பந்தமானவர்களுக்கும் இலங்கையின் அவர்களது பங்காளர்களான படையினருக்கும் இடையில் கடந்த 12 மாதங்களில் நடந்த மூன்றாவது பரிமாற்றுப் பயிற்சியாகும்.

"பிராந்திய பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான உதவிகளுக்காக கப்பற்படைக்குறிய மிகச்சிறந்த பயிற்சிகளைப் பரிமாற்றிக்கொள்ளவும் இருபிரிவினரும் பங்கேற்கும் இதைப்போன்ற மேலும் வேறு செயற்பாடுகளின் பிரகாசமான எதிர்காலத்தை உறுதிசெய்வதற்காகவும் எமது கடந்தகால வெற்றிகளின் அடிப்படையில் கட்டியெழுப்பவும், எங்களால் செய்யக்கூடியதை செய்யவும் நம்பிக்கைக் கொண்டுள்ளோம்" என்று யுஎஸ்எஸ் கொம்ஸ்டொக்கின் கட்டளைத் தளபதி பிரேட்லீ கோலீற் கூறினார்.
"மீளிணக்கம் மற்றும் நீதி என்பவற்றில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தில் எமது வளர்ந்துவரும் படையினருக்குப் - படையினர் ஒத்துழைப்பு பிரதிபலிக்கின்றது" "இலங்கை அரசாங்கம் அதன் மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் தொடர்ச்சியாக முன்னேற்றம் கண்டு வருவதால் இது எமது இரு நாடுகளினதும் படையினருக்கிடையில் மேலும் கூட்டுறவுக்கான அடிப்படையை உருவாக்கும்" என்று இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்க உயர்ஸ்தானீகர் அதுல் கேசாப் குறிப்பிட்டார்.

இப் பரிமாற்று செயற்பாட்டின் அங்கமாக அன்னளவாக 325 ஐக்கிய அமெரிக்க மாலுமிகளும் , கடற்படையினரும் இலங்கை கடற்படை மற்றும் கப்பற்படை இலாகாவைச்சேர்ந்த 175 பங்குபற்றுனர்களுடன் இணைந்து கொண்டனர். ஐக்கிய அமெரிக்க கப்பற்படை இலாகா வெளிநாடுகளில் சேவையை மேற்கொள்ளும் யூஎஸ்எஸ் கொம்ஸ்டொக் இலங்கை கடற்படையினருக்கு உயிர் காப்புத் திறன் , அடங்களாக கப்பலை பாதுகாப்பாக அழைத்துச் செல்லும் செயல்முறை, மனிதாபிமான உதவியும் அனர்த்த புனர்வாழ்வு பயிற்சியும் மற்றும் தரையிலும் தண்ணீரிலும் இயங்கக்கூடிய வாகனங்களை பரிச்சயமாக்குதல் என்பனவற்றின் அண்மைக்கால நுட்பங்களையும் கருவிகளையும் அறிமுகப்படுத்தி உதவினார்கள்.

யூஎஸ்எஸ் கொம்ஸ்டொக் மற்றும் கப்பலில் இருந்த 11வது கப்பற்படை துரிதப் படுத்துதல் பிரிவு (MEU) மாலுமிகளும் கப்பற்படையினரும் இலங்கையின் அதிஉன்னத கலாசார ஸ்தளங்களின் அனுபவங்களையும் இப்பயணத்தின்போது பெற்றுக்கொண்டனர். அத்துடன், படையதிகாரிகள் ரத்மலானையில் உள்ள கண்பார்வையற்ற செவிப்புலனற்ற "சிலோன் ஸ்கூல்" பாடசாலை மாணவர்களுக்கு விளையாட்டுப் பொருட்களை பரிசளிப்பதற்கும், மாணவர்களின் படுக்கையறையை திருத்தியமைப்பதற்கும் ஐக்கிய அமெரிக்க தூதரக அதிகாரிகளுடன் இணைந்துகொண்டனர்.

‘‘சிலோன் ஸ்கூல்’’ பாடசாலையில் உள்ள செவிமடுப்பதில் பலவீனமான இலங்கை மாணவர்களுக்கு உதவுவதற்காக சில நாட்களை இங்கு செலவிட்ட எல்லா மாலுமிகளுக்கும் கடற்படையினருக்கும் நாம் நன்றியுள்ளவர்களாக இருப்போம்’’ என்று உயர்ஸ்தானீகர் கேசாப் கூறினார்.

ஐக்கிய அமெரிக்காவின் 7வது மற்றும் 5வது கப்பற்படையின் கடமைப்பொறுப்புகளுக்கமைவாக தரையிலும் தண்ணீரிலும் இயங்கக்கூடிய மக்கீன் தீவு தயார் குழு, மற்றும் கப்பலில் இருந்த 11வது பிரிவு (MEU) மாலுமிகளும் கப்பற்படையினரும் கால அட்டவணைப்படி பிரித்து நிறுத்தப்பட்டவேண்டிய பொறுப்பு யூஎஸ்எஸ் கொம்ஸ்டொக்கிடம் வழங்கப்பட்டது.

# # #

| | |
|---|---|
| Approved: | AMB (ok) |
| Drafted: | IO/JShen ext. 8113 |
| Cleared: | PAO/JRusso (ok) |
| | DAO/JEnglish (ok) |
| | POL/JPrichett (ok) |
| | DCM/ RHilton (ok) |